**விசேட அறிவித்தல்.**

**கொரிய மொழியாளுமை பரீட்சைக்கான விண்ணப்பப் பத்திரங்களை வெளியிடுதல் (உற்பத்தி மற்றும் மீன்பிடி) - 2025**

2025 ஆண்டிற்கான உற்பத்தி மற்றும் மீன்பிடி சார்ந்த தொழில்களுக்கான பரீட்சை விண்ணப்பப் படிவங்களை வெளியிடுவதற்கு கொரிய நாட்டு மனிதவள அபிவிருத்தி நிறுவனம் முடிவுசெய்துள்ளது.

பரீட்சை விண்ணப்பப் படிவங்களை வெளியிடுவது, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் (www.slbfe.lk) உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிப்பதன் மூலம் இடம்பெறுவதுடன், விண்ணப்பங்கள் இணையவழியில் (Online) செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி, 2025 முதல் செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி, 2025 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பங்கள் வெளியிடலும் பரீட்சைகள் குறித்துமான ஆலோசனைகள் வரும் ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி, 2025 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.slbfe.lk) வெளியிடப்படும்.

**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்**